பக்கங்கள் 21+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 18 வியாழக்கிழமை 14.11.2024 | அதிர்வு 105

## வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பம்

**இரவு 10 மணி முதல் பெறுபேறு**

அதியுயர் சபையாகக் கருதப்படுகின்ற நாடாளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான

05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வாக்களிப்பு வீதம் இம்முறை வீழ்ச்சி



## தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையில் இன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவியரீதியில்அண்ணளவாக 60 முதல் 65 சதவீத வாக்குகளே பதிவாகியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளனர்.

பாரிய அளவிலான எந்தவித முறைகேடும்பதிவாகவில்லைஎன்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வாக்குப் பதிவுகள் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெற்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், நுவரெலியா மாவட்டத்தில் 68 சதவீத வாக்குகளும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும், மொனராகலை மாவட்டத்தில் 63 சதவீத வாக்குகளும், மாத்தறை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும், மாத்தளை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

05▶

# வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்பு

## யாழ்ப்பாணத்தில் பரபரப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சுபாஷ் (வயது 34) எனும் பொலிஸ் உத்தியோகத்தரே சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்

05▶



# யாழில் வாக்களித்த வேட்பாளர்கள்






















# தேசிய மக்கள் சக்தி வலுவான நாடாளுமன்றத்தை அமைக்கும்

## வாக்களித்த பின் ஜனாதிபதி அநுர நம்பிக்கையுடன் தெரிவிப்பு

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று முற்பகல் மருதானை, பஞ்சிகாவத்த – அபயசிங்காராமவில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

வாக்களித்த பின்பு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தி வலுவான நாடாளுமன்றத்தை அமைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்களுக்கு ஏற்புடையதான சட்டங்களை நிறைவேற்றி, புதிய நாடாளுமன்ற கலாசாரத்தை உருவாக்க முடியும் என்றும், தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கை ஒன்றிணைக்கும் ஆட்சியை அமைக்கும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.









# அக்கரைப்பற்றில் வாக்களித்த வேட்பாளர்கள்








**(றிஸ்வான் சாலிஹூ)**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் றமீஸ் முகைடீன் தனது வாக்கைப் பதிவு செய்வதற்காக இன்று அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் கல்லூரி வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றார்.

அதேபோல், புதிய ஜனநாயக முன்னணியின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, தனது வாக்கைப் பதிவு செய்வதற்காக அக்கரைப்பற்று அஸ் – ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றார்.

அத்தோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் ஏ.எல்.தவம், தனது வாக்கைப் பதிவு செய்வதற்காக அக்கரைப்பற்று அஸ் – ஸாஹிரா வித்தியாலயத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றார்.

# ஐக்கியத்துக்கு எதிரானவர்களை வாக்குகளால் திருத்த வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



**(கி.வசந்தன்)**

ஐக்கியத்துக்கு எதிராக இருப்பவர்களைத் திருத்துவதற்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலின் ஊடாகச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் தனது வாக்கை இன்று அவர் பதிவு செய்திருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தல் காலங்களில் இளைஞர்களைக் குறிவைத்து மதுப் போத்தல்களை வழங்கும் செயற்பாடுகளை சிலர் முன்னெடுத்துள்ளனர். எனவே, எதிர்காலத்தில் தேர்தல் திணைக்களம் தேர்தல் சட்டதிட்டங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் ஐக்கியப்பட்டிருக்கக் கூடிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பலப்படுத்துவதன் ஊடாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

ஐக்கியத்திறகு எதிராக இருப்பவர்களைத் திருத்துவதற்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் ஊடாகச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.” – என்றார்.

# காத்தான்குடியில் வாக்களிக்க உதவி கோரிய பெண்; வேறு சின்னத்துக்குப் புள்ளடியிட்ட உத்தியோகத்தர்

## உடனடியாகக் கடமையில் இருந்து நீக்கம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடி ஹிஸ்புலா பாலர் பாடசாலை வாக்குச்சாவடியில் வாக்களிக்கச் சென்று அங்கு வாக்களிக்க உதவி கேட்டு சின்னம் ஒன்றுக்கு புள்ளடியிட்டு தருமாறு கோரிய வயோதிபப் பெண் தெரிவித்த சின்னத்துக்குப் பதிலாக வேறு சின்னத்துக்குப் புள்ளடியிட்டுக் கொடுத்த அங்கு கடமையாற்றிய உத்தியோகத்தரை உடனடியாகக் கடமையில் இருந்து விலக்கிய சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது என்று மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் எம்.பி.எம். சுபயான் தெரிவித்தார்

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த வாக்குச்சாவடியில் சம்பவதினமான இன்று வாக்களிப்பதற்காக வயோதிபப் பெண் ஒருவர் சென்று வாக்களிப்பதற்கு உதவி கோரியதையடுத்து அங்கு கடமையாற்றி வரும் உத்தியோகத்தர் ஒருவரை அவருக்கு உதவுமாறு வாக்குச்சாவடிக்குப் பொறுப்பான தேர்தல் பொறுப்பதிகாரி பணித்துள்ளார்

இதனைத் தொடர்ந்து அந்தப் பெண் ஒரு சின்னத்தைத் தெரிவித்து அதற்கு புள்ளடியிடுமாறு அவரிடம் தெரிவித்தார். அதனையடுத்து மேற்படி உத்தியோகத்தர் வேறொரு சின்னத்துக்குப் புள்ளடியிட்டு வாக்குச்சீட்டை மடித்து அந்தப் பெண்ணிடம் வழங்கியதையடுத்து அவர் அந்த வாக்குச்சீட்டை விரித்துத் தான் தெரிவித்த சின்னத்துக்குப் புள்ளடியிட்டுள்ளாரா எனப் பார்த்தபோது வேறு ஒரு சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் சென்று உடனடியக குறித்த உத்தியோகத்தரைக் கடமையில் இருந்து நீக்கி அவரைத் தேர்தல் திணைக்களத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றதுடன் அந்தப் பெண் உரியவாறு வாக்களிக் ஏற்பாடுகளையும் செய்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரி திடீர் மரணம்

## ஊழியர் ஒருவரும் மாரடைப்பால் சாவு

கெஸ்பேவ பொலிஸ் பிரிவிலுள்ள சிறி சதஹம் பிக்/மடத்தின் வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரியாகப் பரிந்துரைக்கப்பட்ட பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண்ணின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.



இதேவேளை, கொபேகன பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் ஊழியராகக் கடமையாற்றிய 57 வயதுடைய நபர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். மேற்படி ஊழியர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வாக்கெண்ணும்...**

வாக்கெடுப்பு தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், இரவு 10 மணி முதல் தேர்தல் பெறுபேறு வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

முதலாவதாக தபால்மூல வாக்களிப்பு பெறுபேறு அறிவிக்கப்படும்.

நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை மூலம் 196 உறுப்பினர்களும், தேசியப் பட்டியல் ஊடாக 29 பேரும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

196 ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகள் சார்பில் 5 ஆயிரத்து 6 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்களில் 3 ஆயிரத்து 346 இருந்து வேட்பாளர்களுமாக மொத்தம் 8 ஆயிரத்து 352 பேர் போட்டியிட்டனர்.

பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

இன்று மாலை 4.30 மணி முதல் வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

**வாக்களிப்பு...**

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் நேற்று புதன்கிழமை முதல் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில் இன்று வியாழக்கிழமை காலை உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சடலத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார், அதை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தச் சம்பவத்தால் இன்று காலை குறித்த வாக்களிப்பு நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்துப் பிறிதொரு பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்கு அமர்த்தப்பட்டு வாக்களிப்பு சுமுகமான முறையில் ஆரம்பிக்கப்பட்டது.

**வாக்களிப்பு வீதம்...**

பதுளை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும், கேகாலை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 63 சதவீத வாக்குகளும், குருநாகல் மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும், புத்தளம் மாவட்டத்தில் 56 சதவீத வாக்குகளும், பொலனறுவை மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், அம்பாறை மாவட்டத்தில் 62 சதவீத வாக்குகளும், காலி மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும், அனுராதபுரம் மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும், திருகோணமலை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தலும் ஊழலும்

இலங்கைப் பொதுத் தேர்தலின் வாக்களிப்பு இன்று நடைபெற்று முடிந்திருக்கின்றது.

நாட்டின் பல நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகளின் எதிர்கால தலையெழுத்து எழுதப்பட்டு விட்டது.

மக்கள் அளித்த தீர்ப்பு யாது என்பதை கணக்கீடு செய்கின்ற வாக்கு எண்ணும் பணி தொடங்கியுள்ளது. நாளை காலை விடியும் போது அரசியல் நிலைமை ஓரளவு தெளிவாகியிருக்கும்.

அரசியல்வாதிகளின் தலையெழுத்து மாத்திரமல்ல, நாட்டின் தலையெழுத்தே மக்களின் பேனா முனையில் முடிவு செய்யப்பட்டாகிவிட்டது. அந்த முடிவு யாது என்பதை கணக்கிட்டு வெளிப்படுத்தும் பணிதான் இப்போது தொடங்கி இருக்கிறது.

இந்தத் தேர்தலை ஒட்டி நுவரெலியா மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் மயில்வாகனம் திலகராஜா கூறியிருக்கின்ற விடயங்கள் கவனத்திற்குரியனவாக இருக்கின்றன. ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பு குழுவினரிடம் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் இந்த விடயங்களை அவர் விவரித்து இருக்கின்றார்.

'ஊழலற்ற அரசை அமைப்போம்' என்னும் மகுட வாசகத்தைக் கொண்டு இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஜனாதிபதித் தேர்தலில் நிகழ்ந்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், மிக ஊழல் நிறைந்த தேர்தல் களமாக இந்த 2024 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் நடைபெறுகிறது என்று அவர் சுட்டியிருக்கின்றார்.

கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக இலங்கையில் நடைபெறும் தேர்தல்களின் போது அவை வன்முறை நிறைந்தனவாக இருக்கும். அந்த வன்முறைகளை இல்லாமல் ஆக்குவதற்காக கடந்த காலம் முழுவதுமாக பல்வேறு பிரச்சாரங்களை முன்னெடுத்து, சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் ஊடாக அவை தடுக்கப்பட்டுள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இன்று வன்முறைக்கு மாறாக ஊழல்கள் தலைவிரித்தாடும் தேர்தல் இடம்பெற ஆரம்பித்துள்ளது.

அரசியல் கட்சிகளையும், வேட்பாளர்களையும், சுயேச்சைக் குழுக்களையும் தனியார் கம்பெனிகள் விலைக்கு வாங்கி ஜனநாயக தேர்தலை பணநாயகத் தேர்தலாக மாற்றியுள்ளன என்று குற்றம் சுமத்துகின்றார் திலகராஜ்.

தேர்தல் களத்தில் வேட்பாளர்கள் அல்லாதவர்கள் சுவரொட்டி ஒட்டி வாக்கு சேகரிக்கிறார்கள். சுயேச்சைக் குழுவொன்று தான் போட்டியிட்டுக் கொண்டு வேறு கட்சிக்கு விலை போய் அந்தக் கட்சிக்காக வாக்கு சேகரிக்கின்றது.

வாக்காளர்களுக்கு பணம், பொருள் விநியோகம் செய்கிறார்கள். தொண்டு நிறுவனங்களின் போர்வையில் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு பொருள் விநியோகம் செய்கின்றனர். கட்சிகளே தமக்கான ஊடகங்களையும் நடத்திக்கொள்கின்றன.

அரசாட்சியில் ஊழல் என அதனை மாற்ற வந்த அரசில் - புதிய அரசை அமைக்கப்போகும் தேர்தலில் - தேர்தல் நடைபெறும் போதே இத்தகைய ஊழல் இடம்பெறுவது வருத்தத்துக்கு உரியது. இனி அரசாட்சியில் மட்டுமல்ல, தேர்தல்களில் இடம்பெறும் ஊழல்களுக்கு எதிராகவும் கடுமையான சட்டதிட்டங்களை உருவாக்க வேண்டி உள்ளது என்று அவர் கோரியிருக்கின்றார்.

வன்முறைகள் குறைந்த தேர்தலை நடத்துவதில் ஓரளவு முன்னேற்றம் கண்ட நாடு, ஊழல், சீர்கேடுகள் நிறைந்த தேர்தல்களினின்றும் விடுபடுவதற்கு இன்னும் நீண்ட காலத்தை - தூரத்தை - கடக்க வேண்டியிருக்கும்.



# மன்னாரில் வாக்களித்த ரிஷாத்






(எஸ்.ஆர்.லெம்பேட்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளரு மான ரிஷாத் பதியுதீன், இன்று காலை நாடாளுமன்றத் தேர்தலுக்கான தனது வாக்கைப் பதிவு செய்தார்.

மன்னார், தாராபுரம், அல் மினா மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில், அவர் தனது குடும்பத்தினர் சகிதம் வாக்குச் செலுத் தினார்.

இதன்போது, தாராபுரம் பிரதேச இளைஞர்களால் ரிஷாத் பதியுதீனுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ரிஷாத்,

“வன்னி மாவட்ட மக்களுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக, பல நல்ல பணிகளைச் செய்திருக்கின்றோம். அந்தவகையில், மாவட்டத்தின் அபி விருத்திக்காகவும், மக்கள் நலனுக் காகவும் நாம் ஆற்றிய பணிக்கு, மக்கள் இந்தத் தேர்தலிலே எமக்கு அதிகமான வாக்குகளை வழங்கி, ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்திக்குப் பெற்றுத் தருவார்கள் என நம்புகின்றோம்.” – என்றார்.



# வாக்களித்த திலீபன்

(கி.வசந்தன்)

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று இடம்பெற்ற நிலை யில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான குலசிங்கம் திலீபன் இன்று காலை தனது வாக்கைப் பதிவு செய்தார்.

வவுனியா காத்தார் சின்னக் குளம் பாடசாலையில் அமைந் துள்ள வாக்களிப்பு நிலையத் தில் காலை அவர் தனது வாக் கைப் பதிவு செய்தார்.



# வாக்களித்த திகாம்பரம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத் தில் தொலைபேசி சின்னத் தின் கீழ் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் பழனி திகாம்பரம், நாடாளுமன்றத் தேர்தலுக் கான தனது வாக்கை இன்று காலை செலுத்தினார்.

தலவாக்கலை – வட்ட கொடை கலாபுவனம் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப் பட்டுள்ள வாக்களிப்பு நிலை யத்துக்குச் சென்று, தனது வாக்கை அவர் செலுத்தி னார்.






# பிரித்தானிய தமிழர் விருதுகள்!

(பாபா லக்சி)

பிரித்தானிய தமிழர் விருதுகள் வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை (02) லண்டனில் Slough பகுதியில் அமைந்துள்ள Crystal Grand மண்டபத்தில் முதன்முறையாக அரங்கேறியது.

இவ்விழாவில் பல நாடுகளையும் பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானிய வாழ் தமிழர்களும் ஐரோப்பிய தமிழர்களும் கலந்து கொண்டனர்.

இந்த விருது வழங்க வேண்டும் என்று எண்ணி, ஆரம்ப காலத்தில் இதற்கு வித்திட்டவர்களில் ஒருவர் முன்னாள் Newham நகரபிதா போல் சத்திய நேசன். இந்த நிகழ்வு அவர் இருக்கும் போது இந்த நிகழ்வு நடைபெறவில்லை.

இந்த நிலையில் தற்போது அவரது




விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

ஒன்பது பிரிவுகளில் 109 விருதுகள் இதன்போது வழங்கிக் கௌரவித்தார்கள். அந்த வகையில் 22 வாழ்நாள் சாதனையாளர் விருதுகள், 7 ஐரோப்பிய விருதுகள், மற்றும் 80 ஏனைய விருதுகளையும் பல துறைகளில் எமக்கு முன்னோடிகளாக இருந்தவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பிரித்தானிய அரசால் வழங்கப்படும் "ORDER OF Tu;E BRITISu; EMPIRE" விருதைப் பெற்ற கலாநிதி சபேசன் சிதம்பரநாதன், பிரான்ஸ் அரசால் வழங்கப்படும் "WINNER OF GRAND PRIZE OF TRADITIONAL FRENCu; BAGUETTE" விருதைப் பெற்ற தர்ஷன் செல்வராஜா, "BBC MASTER Cu;EF WINNER 2024" விருதை பெற்ற பிரிந்தன் பிரதாபன், பிபிசி தமிழோசை புகழ் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், 84 வயது நிரம்பிய எங்கள் வானொலி அறிவிப்பாளர் என். எஸ். லோகேஸ்வரன் ஆகியோரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.







# கற்பிட்டி தமிழ் இலக்கிய மன்றத்தின் கவிதைப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றம் தமது வட்சப் குழுமத்தின் ஊடாக நடத்திய கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (10) மாலை மன்றத்தின் தலைமையகத்தில் அதன் தலைவர் எஸ். எம் அரூஸ் தலைமையில் இடம்பெற்றது.

பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பட்ட பரிசளிப்பு நிகழ்வு உப தலைவர் எம். எம். நவ்பின் வரவேற்புடன் தலைவர் எஸ். எம். அரூஸின் கருத்துரையுடன் இடம்பெற்றது. அத்தோடு செவிக்கு விருந்தாக அங்கத்தவர் எம். நாசரின் பாடல் மற்றும் பொருளாளர் ஏ.எச்.எப் பர்வினின் கவி வரிகள் மேலும் நிகழ்வை மெருகூட்டியன. மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ். சுப்ரமணியம் ஆசிரியரின் சிறப்புரையும் இடம்பெற்றது.



கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் வட்சப் குழுமத்தில் கண்ணீர் எனும் தலைப்பில் இடம்பெற்ற கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தை ரமீனா ரபீக் பெற்றுக் கொண்டார். இரண்டாம் இடத்தை ஏ.எச். எப். பர்வின், மூன்றாம் இடத்தை எஸ். சுப்ரமணியம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கவிதை போட்டியில் பங்குபற்றிய ஏனையவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் கண்ணீர் தலைப்பில் சிந்திய துளிகள் எனும் போட்டிக் கவிதைகளின் தொகுப்பும் மன்றத்தின் செயலாளர் எம் எச் எம் சியாஜ் முயற்சியால் வெளியிடப்பட்டது.. இவர்களுக்கான நினைவு சின்னம் மற்றும் சான்றிதழ்களுக்கான அனுசரணையை றிஸ்டா குளிர்பானங்களின் கற்பிட்டி பிரதேச விநியோகஸ்தர் எம்.எப்.எம் றில்மியாஸ் வழங்கியிருந்தார்.





# 106 வயது முதியவர் வாக்களிப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

106 வயது முதியவர் யோன் பிலிப் லூயிஸ் இன்று (14) நாடாளுமன்றத்தேர்தலுக்கான தமது வாக்கை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் செலுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் 18.11.1918 இல் தாம் பிறந்து, தமது 22 வயதில் திருகோணமலைமலைக்கு வந்து தொடர்ந்து இங்கு வாழ்ந்து வருகிறார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்கள் அனைத்திலும் தாம் வாக்களித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




**1.கேள்வி:**

தமிழரசுக் கட்சியைக் கடுமையாய் ஆதரிக்கிறீர்கள். இம்முறை முடிவுகள் தலைகீழாகும் என்கிறார்களே. அப்படி நடந்தால் என்ன செய்யப்போகிறீர்கள்?

**பதில்:**

இதில் நாங்கள் செய்ய என்ன இருக்கிறது? சரியான வற்றைச் சொன்னதோடு எங்கள் வேலை முடிந்து போயிற்று. செயல்படவேண்டியது மக்கள்தான். ஆனால் ஒன்று 'நாங்கள் சொன்னது சரி தான்' என்று காலம் உணர்த்தும்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**2.கேள்வி:**

கம்பன் கழகத்தினர் தமிழரசுக் கட்சிக்கு இந்த அளவு ஆதரவு கொடுப்பதன் நோக்கம்தான் என்ன?

**பதில்:**

நம் இனம் உருப்பட இப்போதைக்கு அவர்களை விட்டால் வேறு வழி இருப்பதாய்த் தெரியவில்லை. அதனால்தான் அந்த ஆதரவு.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**3.கேள்வி:**

நடிகர் விஜய்யின் எழுச்சி பற்றி?

**பதில்:**

அது, ஒரு நடிகரின் எழுச்சியா? ஒரு தலைவரின் எழுச்சியா? என்பதை அவரின் அடுத்தடுத்த நடவடிக்கைகள்தான் சொல்லவேண்டும்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**4.கேள்வி:**

இம்முறை சுமந்திரன் தோற்றுவிட்டால் என்ன செய்வீர்கள்?

**பதில்:**

தீக்குளித்து விடுவேன்! சும்மா போமையா! உமக்கு வேறு வேலை இருக்கிறதோ?, இல்லையோ? எனக்கு வேறு வேலை இருக்கிறது. சுமந்திரன் மீதான எனது ஆதரவு என்பது, இம்முறை போட்டியிடும் வேட்பா ளர்களின் ஆற்றல்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்து வந்த விடையால் அமைந்தது. எனக்கு இனத்தின் உயர்வு பற்றி மட்டுமே அக்கறை. இப்போதைக்குச் சுமந்திரனை விட்டால் நம் இனத்திற்கு வழிகாட்ட ஓர் பொருத்தமான தலைவர் இருப்பதாய்த் தெரியவில்லை. அவ்வளவுதான்!

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**5.கேள்வி:**

தனது நோயாளியான மகனுக்குத் திருமணம் செய்து வைத்து, நடிகர் நெப்போலியன் மனம் கலங்கி அழுத காட்சியைப் பார்த்தீர்களா?

**பதில்:**

அவர் மட்டுமா அழுதார்? நானும்தான் அழுதேன். அந்த அப்பாவிப் பெண்ணை நினைந்து–

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**6.கேள்வி:**

கூட்டத்திற்காகவென வந்து இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு விஜய் ஏதும் உதவி புரியாதது பற்றி...,?

**பதில்:**

முன்னமே 'இரு சக்கர வாகனங்களில் வரவேண்டாம்!' என அவர் எச்சரித்திருந்தார். அதை மீறி வந்து உயிரைப் பலிகொடுத்தது அவர்களின் குற்றமேயாம்! ஆனாலும் ஒரு தலைவன் தாயின் நிலையில்தான் இருக்கவேண்டும். சொன்னபிறகும் பிழை செய்து பாதிக்கப்படும் மகனுக்கும் தாய் இரங்கத்தான் செய் வாள். படத்திற்கு 200 கோடி சம்பாதிப்பவர், ஆளுக்கு 2 இலட்சம்படி கொடுத்திருந்தால்கூட அது மரியாதையாய் இருந்திருக்கும்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**7.கேள்வி:**

'டான் ரி.வி.' தொலைக்காட்சிக்காக சீ.வி.கே. சிவ ஞானத்தை, குகநாதன் எடுத்த பேட்டியைப் பார்த்தீர்களா?

**பதில்:**

அவர் பேட்டி எடுத்தாரா என்ன? பேட்டி கொடுத்த மாதிரி அல்லவா இருந்தது. சிவஞானம் ஐயாவைப் பேசவிடாமல் தானே பேசிக்கொண்டிருந்தார். முன்னைய சீ.வி.கே. ஐயாவாக இருந்திருந்தால், குகநாதனின் தூசு பறந்திருக்கும். காலத்தால் தப்பித்தார்.

பேட்டி எடுப்பவர்கள் தமது சுருக்கமான, இறுக்கமான கேள்விகளால் எதிராளிகளிடம் இருந்து, தாம் எதிர்பார்க்கும் பதில்களை வெளிக்கொணரச் செய்ய வேண்டுமே தவிர, அப் பதில்களைத் தாமே பேசிக் கொண்டிருந்தால் கேட்க அலுப்பாக இருக்கி றது. இதற்கு மினக்கட்டு ஒருவரை அழைத்துப் பேட்டி எடுக்கவேண்டிய தேவைதான் என்ன? தன் கருத்தைத் தானே பேசி விட்டுப் போகலாமே! அனுபவம் போத வில்லை.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

தொடர்ச்சி▼




தொடர்ச்சி▲

**8.கேள்வி:**

ஸ்ரீதரன் கிளிநொச்சியில் தனியே நடத்திய தமிழரசுக் கட்சிக் கூட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:**

சூடு பட்ட பின்பும், பூனை அடுப்படியை நாடுகிறது. அவரின் பகை, “மூளாத்தீ போல் உள்ளே கனன்று” கிடப்பதை அறிய முடிந்தது.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**9.கேள்வி:**

இணையத்தளங்களில் அளிக்கும் பேட்டிகளில், ஸ்ரீதரனின் ஆதரவாளர்கள் ‘தாம் தமிழரசுக் கட்சியில் ஸ்ரீதரனுக்கு மட்டும்தான் வாக்களிப்போம்’ என்கிறார்களே?

**பதில்:**

சரியோ? பிழையோ? அது அவர்களின் ஜனநாயக உரிமை! பகையை வளர்க்கிறார்கள். அதற்கான பயனையும் பெறுவார்கள். அவ்வளவுதான்!

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**10.கேள்வி:**

அமெரிக்காவில் ‘ட்ரம்ப்’ இன் வெற்றி பற்றி?

**பதில்:**

அனுபவஸ்தனாய் வந்திருப்பதால் உலகை உருப்படுத்துவார் என்பதா? இனிப் பதவிக்கு வாய்ப்பில்லை என்பதால் உலகை உருக்குலைப்பார் என்பதா? சொல்ல முடியவில்லை. உண்மை ஓரிரு மாதங்களில் தெரியத் தொடங்கும்.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**11.கேள்வி:**

உங்களுக்கு ‘சைக்கிள்’ கட்சியைப் பிடிக்காதா?

**பதில்:**

யார் சொன்னது? கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தொடர்ந்து தலைமை தாங்குவாரேயானால் அக் கட்சியும் பரவாயில்லைத்தான். தாங்குவாரா? என்பதுதான் கேள்வி. அவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களிடம் அறிவைக் காண முடியவில்லை. உணர்ச்சிக் கொந்தளிப்பை மட்டுமே காண முடிகிறது.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**12.கேள்வி:**

‘ஊசி’ இம்முறை தப்புமா?

**பதில்:**

அதற்கான பதிலை நான் சொல்ல முடியாது. மக்கள்தான் சொல்லவேண்டும். ஆனால் ஒன்று, ‘ஊசி தப்பினால் மக்கள் தப்புவது கஷ்டம்” இந்தப் பதிலை நானே சொல்லலாம்.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**13.கேள்வி:**

இம்முறை ‘மான்’ எழும்பிப் பாயும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:**

‘மணி’யால் ஏதும் கிடைத்தால் உண்டு. இங்கு நான் சொல்வது மணிவண்ணனை. ‘பார்’ மணியை அல்ல.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**14.கேள்வி:**

யாழ்ப்பாணத்தில் ‘அநுர’விற்கான ஆதரவைப் பார்த்தீர்களா? நமது தமிழ்த் தலைவர்கள் செய்யும் கோளாறுகளைப் பார்த்தால், அவருக்கே இம்முறை தமிழ் மக்கள் வாக்களித்து விடுவார்களோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

**பதில்:**

இப்படிப் பலபேர் பேசி வருகிறார்கள். எனக்கென்னவோ அதில் உடன்பாடில்லை. அநுர கட்சியினர் நல்லவற்றைச் சொல்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் பேசிய அளவுக்கு, இன்னும் பெரிய அளவில் எதையும் செய்துகாட்டவில்லை. தாம் வலியுறுத்திச் சொன்ன சில விடயங்களையே இப்போது மாற்றத் தொடங்கி இருக்கிறார்கள். அதனால் இம்முறை விடுத்து, சொன்னவற்றைச் செய்து காட்டுவார்களேயானால் நாமும் அவர்கள் பின்னால் போகவேண்டியதுதான்.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**15.கேள்வி:**

‘சங்கு’ ஊதுமா?

**பதில்:**

அவர்களுக்கே ஊதலாம்.

✦✦✦✦✦✦ ✦✦✦✦✦✦

**16.கேள்வி:**

‘ஆர்னோல்ட்’ சுமந்திரன் கூட்டத்திலும் இருக்கிறார், ஸ்ரீதரன் கூட்டத்திலும் இருக்கிறார். பார்த்தீர்களா?

**பதில்:**

மீனுக்குத் தலை. பாம்புக்கு வால். அவ்வளவுதான்! சுமந்திரன் தெரிந்தே செய்த பிழைகளில் இதுவும் ஒன்று.





# மலையக தோட்ட மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு

(க.கிஷாந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய நிலையில் மலையகத்தை பொறுத்தவரை பெருந்தோட்ட மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தங்களுடைய வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 6 லட்சத்து 5,292 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 347,646 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். கொத்மலை தேர்தல் தொகுதியில் 88219 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வலப்பனை தேர்தல் தொகுதியில் 90,990 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதோடு ஹங்குராங்கெத்த தேர்தல் தொகுதியில் 78,437 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

65 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குகளை எண்ணுவதற்காக நுவரெலியா காமினி தேசிய கல்லூரியில் வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தபால் வாக்குகள் எண்ணுவதற்காக வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் 10000 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் 2500 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல் மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளிலும் ஊவா மாகாணத்தில் பதுளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளிலும் வாக்களிப்பு மிகவும் நீதியாகவும் சுதந்திரமான முறையிலும் நடைபெற்று வருவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.





# வன்முறையற்ற தேர்தல் காலம் போய் ஊழல் நிறைந்ததாக உருவாகியுள்ளது

## ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் திலகராஜா எடுத்துரைப்பு

(மஸ்கெலியா)

ஊழலற்ற அரசை அமைப்போம் என்னும் மகுட வாசகத்தைக் கொண்டு இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், மிக ஊழல் நிறைந்த தேர்தல் களத்தில் இந்த 2024 பொதுத தேர்தல் நடைபெறுகிறது.

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகளிடம் நுவரெலியா மாவட்ட உதயசூரியன் அணியின் தலைமை வேட்பாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்பு குழுவினருக்கும் மலையக அரசியல் அரங்கத்துக்குமான சந்திப்பு நுவரெலியாவில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஒரு தசாப்தங்களுக்கு முன்னதாக இலங்கையில் நடைபெறும் தேர்தல்களின் போது அவை வன்முறை நிறைந்ததாக இருக்கும். அவற்றை இல்லாமல் ஆக்குவதற்காக கடந்த காலம் முழுவதுமாக பல்வேறு பிரச்சாரங்களை முன்னெடுத்து சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் ஊடாக அவை தடுக்கப்பட்டுள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இன்று வன்முறைக்கு மாறாக ஊழல்கள் தலைவிரித்தாடும் தேர்தல் இடம்பெற ஆரம்பித்துள்ளது.

தனியார் கம்பெனிகள் அரசியல் கட்சிகளையும், வேட்பாளர்களையும், சுயேச்சைக் குழுக்களையும் விலைக்கு வாங்கி ஜனநாயக தேர்தலை பணநாயகத் தேர்தலாக மாற்றியுள்ளன.

தேர்தல் களத்தில் வேட்பாளர்கள் அல்லாதவர்கள் சுவரொட்டி ஒட்டி வாக்கு சேகரிக்கிறார்கள். சுயேச்சைக் குழுவொன்று தான் போட்டியிட்டுக் கொண்டு வேறு கட்சிக்கு விலை போய் வாக்கு சேகரிக்கிறார்கள்.

வாக்காளர்களுக்கு பணம், பொருள் விநியோகம் செய்கிறார்கள். தொண்டு நிறுவனங்களின் போர்வையில் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு பொருள் விநியோகம் செய்கின்றனர். கட்சிகளே தமக்கான ஊடகங்களையும் நடத்திக் கொள்கின்றன.

அரசாட்சியில் ஊழல் என அதனை மாற்ற வந்த அரசில் – அரசை அமைக்கப் போகும் தேர்தலில், தேர்தல் நடைபெறும் போதே இத்தகைய ஊழல் இடம்பெறுவது வருத்தத்துக்கு உரியது.

இனி அரசாட்சியில் மட்டுமல்ல தேர்தல்களில் இடம்பெறும் ஊழல்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டி உள்ளது.- என்றுள்ளது.





# உலக நீரிழிவு தினம் இன்று!

(றியாஸ் ஆதம்)

அதிகரித்த உடல் நிறை குறைந்தளவு தேகப்பயிற்சி என்பன முதன்மை காரணிகளாக பிள்ளைகளிடையே விளங்கவதோடு, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களும் குடும்ப வரலாறுமே நீரிழிவு நோய் வரக்காரணமாகிறது.

கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியஅதிகாரிடாக்டர்எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் இதனைத் தெரிவித்தார்.

உலக நீரிழிவு தினம் இன்றாகும். (நவம்பர் 14).

இதனை முன்னிட்டு கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

தடைகளை உடைத்தெறிதலும் இடைவெளிகளை நிரப்புதலும் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் உட்பட பிராந்திய பிரிவு தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# முன்னாள் எம்.பி. குகதாசன் தனது வாக்கைப் பதிவு செய்தார்

(ஹஸ்பர் ஏ.எச்.)

இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்ற தேர்தல் இன்று இடம்பெறும் நிலையில் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான சண்முகம் குகதாசன் இன்று (14) தனது வாக்கைப் பதிவு செய்தார். திருகோணமலை திரியாய் தமிழ் மகா வித்தியாலத்தில் இன்று காலை 7 மணி அளவில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.






# அமைதியான முறையில் மன்னாரில் வாக்களிப்பு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இலங்கையின நாடாளுமன்றத் தேர்தலில் இன்று வியாழக்கிழமை (14) காலை 7 மணி முதல் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் இடம்பெற்றுள்ளது.

வன்னி மாவட்டம் மன்னார் தேர்தல் தொகுதியில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் இடம்பெற்றது.

காலையில் சற்று மந்த கதியில் வாக்களிப்புகள் இடம் பெற்றாலும் பின்னர் மக்கள் வருகை தந்து வாக்களிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.



# வாக்கை பதிவு செய்த ஜீவன்!

**(க.கிஷாந்தன்)**

நுவரெலியா மாவட்டத்தில், யானை சின்னத்தின் கீழ் போட்டியிடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், 2024 ஆண்டின் நாடாளுமன்ற தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

கொத்மலை – வேவன்டன் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, குறித்த வாக்களிப்பு நிலையத்திற்கான தனது முதலாவது வாக்கை இன்று காலை 07 மணிக்குச் செலுத்தினார்.



# அம்பாறையில் சுமுகமாக நடந்த வாக்களிப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்ற தேர்தல் அம்பாறை மாவட்டத்தில் இன்று (14) வியாழக்கிழமை காலை முதல் 528 வாக்களிப்பு நிலையங்களில் சுமுகமாக ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றது.

குறிப்பாகக் கரையோரப் பிரதேசங்களில் இன்று காலையில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க சென்றிருந்தனர்.

காலையில் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. இருந்த போதிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க சென்றிருந்தனர்.

எனினும் ஏனைய தேர்தல்களைப் போல் வாகன ஓட்டங்கள் படையெடுத்து வாக்களிக்கச் செல்லுதல் என்பது குறைவாகவே காணப்பட்டன.

2024 நாடாளுமன்ற தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555,432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி அம்பாறை 188222 பேர், சம்மாந்துறை 99727 பேர், கல்முனை 82830 பேர், பொத்துவில் தொகுதியில் 184653 பேர் தகுதியுடையவர்கள் ஆவர். இம்மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 04 ஆகும்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் 184 அம்பாறை வாக்களிப்பு நிலையங்கள், 93 சம்மாந்துறை வாக்களிப்பு நிலையங்கள், 74 கல்முனை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 177 பொத்துவில் வாக்களிப்பு நிலையங்கள் உட்பட 528 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.



அதேவேளை, இன்று மாலை அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெற சகல ஏற்பாடுகளும் நடைபெற்று முடிந்திருக்கின்றன என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

# பாடசாலை சிறுவனை துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபரான ஆசிரியருக்கு விளக்கமறியல்

## சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

9 வயது பாடசாலை சிறுவனை பல முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேக நபரான 38 வயது ஆசிரியரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரம் 4 இல் கல்வி பயிலும் பாடசாலை சிறுவனின் பெற்றோரால் நேற்று (13) மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய சந்தேக நபரான 38 வயது ஆரம்ப கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புற நகர் பகுதி ஒன்றில் உள்ள பாடசாலையில் இடம்பெற்றது. அந்தப் பாடசாலை மாணவனை அப்பாடசாலையின் மலசல கூடத்திற்கு அழைத்து சென்று பலமுறை பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார் என்று 38 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரான ஆசிரியர் மீதுமுறைப்பாடுதெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபரான ஆசிரியரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன் கிழமை (13) முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்தறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 9 வயதுச் சிறுவன் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மட்டக்களப்பு பிராந்திய பொலிஸ் அலுவலகத்தில் செயற்றிட்டங்கள்

(பழுலுல்லாஹ் பர்ஹான்)

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான்னவின் கருத்துக்கமைய மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் புதிதாக நிறுவப்பட்ட பொலிஸ் நூலகம்,உடற்தகுதி மற்றும் உடற்கட்டமைப்பு மையம், நவீனப் படுத்தப்பட்ட மநாட்டு மண்டபம் என்பனவற்றை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று 13 புதன்கிழமை இடம்பெற்றன.

இதன் போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கலாநிதி அஜித் ரோஹணவால் நினைவுப் படிவம் திரை நீக்கம் செய்யப்பட்டு கட்டடம் நாடா வெட்டி உத்தியோக பூர்வமாகத் திறக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெறும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நேரில் சென்று பார்வையிட்டு ஆலோசனைகளையும் வழங்கினார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளீயூ. இ.ஜகத் விஷாந்த, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான்ன உட்பட மாவட்டத்திலுள்ள பிராந்தியங்களின் பொலிஸ் அத்தியட்சகர்கள், மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உட்பட பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நூலகம், உடற்பயிற்சி மையம், மநாட்டு மண்டபம் என்பன முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# சமூக ஊடகங்களும் பாடசாலை மாணவரும்

இன்றைய அறிவியல் உலகம் தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களின் மூலம் மிக உன்னதமான பின்னிப் பிணைப்பை உலக மக்களிடையே எளிமையாக்கி விட்டது. அத்தோடு தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மானிட நாகரிகத்தையும் வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்து விட்டன.

பண்டைய காலத்தில் தகவலை பரிமாற்றிக் கொள்ள புகை, பறையொலி, புறா மூலம் தூது அனுப்புதல் என்பன ஆரம்பகால ஊடகங்களாக (Primitive Media) காணப்பட்டன. அதன்பின்னர் கலைகள், ஓவியம், சிற்பம் வழியான பாரம்பரிய அல்லது மரபார்ந்த ஊடகங்களை (Traditional Media) பயன்படுத்தினர். அதனைத் தொடர்ந்து கடிதங்கள், தொலைபேசி முதலிய தனி ஊடகங்கள் (Personal Media) என்பவற்றைப் பயன்படுத்தினார்.

கடிதங்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற வெகுசன ஊடகங்களை (Mass Media) பயன்படுத்தினர். அதன் பின்னர் இணையம் போன்ற புதிய ஊடகங்கள் (New Media) என ஊடகங்கள் பல்வேறு வகையாகின்றன.

சமூகம் என்பது "ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காக கூடி செயல்படும் மனிதர்களின் கூட்டே ஆகும்" என கிட்டிங்ஸ் (Giddings) கூறுகின்றார். அவருடைய கருத்துக்கு இணங்க மக்கள் ஒரு சமூகத் தொழில்நுட்ப கட்டமைப்புக்குள் இணைந்து வாழ சமூக



**வில்விரித்தப்பு பிரசாத்,**
**2 ஆம் வருடம்,**
**ஊடகக்கற்றைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

ஊடகங்கள் துணை புரிகின்றன. இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களில் செல்வாக்கும் தாக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சமூக ஊடகத்தைப் பயன்படுத்தாத நபர்களை விரல் விட்டு எண்ணிப் பார்க்கும் அளவுக்குச் சமூக ஊடகங்களின் வளர்ச்சி அபரிமிதமாக நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

சமூக ஊடகம் (Social Media) என்பது இணையத்துக்கான ஊடகத்தை பயன்படுத்தி, மனிதர்களுக்கு இடையில் தகவல்களை பகிர்தல், உரையாடுதல், கருத்துப் பரிமாற்றம் என சமூக உறவுகளை உருவாக்கும் ஒரு தளமாகும். இந்த சமூக ஊடகங்கள் இணைய தளங்கள் மற்றும் செயலிகளாக காணப்படுகின்றன. முகநூல் (Facebook), புலனம் (WatsApp), படவரி (Instagram), வலையொளி (You tube), கீச்சகம் (Twitter), பற்றியம் (Messenger) போன்றவற்றை சமூக ஊடகங்களுக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

இலங்கையை பொறுத்தவரையில் பாடசாலை மாணவர்களில் பெரும்பான்மையானோர் அதிகமாக facebook, Tik Tok, WatsApp போன்ற செயலிகளைப் பயன்படுத்துகின்றனர். இலங்கையில் 13 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துகின்றனர். குறிப்பாக ஆய்வுகளின் படி 13 தொடக்கம் 18 வயது இடைப்பட்ட வயதுடையோரே அதிகமாகச் சமூக ஊடகங்களின் பயன்பாட்டுக்கு அடிமையாகி காணப்படுகிறது. அண்மைக்காலத் தரவுகளின் படி 2020 தொடக்கம் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பாடசாலை மாணவர்களில் 60 வீதம் - 80 வீதம் வரையான மாணவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

சமூக ஊடகங்கள் பாடசாலை மாணவர்களிடையே பெரிதும் தாக்கம் செலுத்தும் காரணியாக காணப்படுகிறது. சமூக ஊடகங்கள் மாணவர்களின் கற்றலுக்கு உறுதுணையாக இருப்பதுடன் அதே அளவு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும் உந்துதல் காரணியாகவும் சமூக ஊடகங்கள் உள்ளன. நாணயத்தின் இரு பக்கம் போல சாதகமான காரணிகளும் பாதகமான காரணிகளும் காணப்படுகின்றன.

அந்த வகையில் சமூக ஊடகங்களின் மூலம் பாடசாலை மாணவர்கள் பல சாதகமான விடயங்களை பெற்றுக் கொள்கின்றனர் என்று கூறலாம். Google, ChatGBT போன்ற செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligent AI) மூலம் மாணவர்க

தொடர்ச்சி ▼



# சமூக ஊடகங்களும் பாடசாலை மாணவரும்

தொடர்ச்சி▲

ளுக்கு புதிய விடயங்களையும் தெரியாத விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு இவை துணை புரிகின்றன. youtube. Twitter, Linkedin போன்ற செயல்கள் மூலம் மாண வர்கள் கற்றல் சார்ந்த விடயங்களை வீடியோ காணொளிகள் மூலம் நேரடியாகக் கற்பதற்கு உரிய வாய்ப்புகள் கிடைக்கின்றன.

மாணவர்கள் தங்களின் ஆர்வமான துறைகளில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி புதிய வழிமுறைகளையும் பயிற்சிகளையும் கற்றுக் கொள்ள முடிகின்றது. உதாரணமாக கலை சார்ந்த விடயங்கள், செய்முறை பயிற்சிகள் சார்ந்தவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள சமூக ஊடகங்கள் மாணவர்களுக்கு உதவியாக இருக்கின்றன.

சமூக ஊடகங்கள் உலகெங்கும் இடம்பெறுகின்ற சம்பவங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் மாணவர்கள் புதிய கண்டு பிடிப்புகளை நிகழ்த்தவும், சமுதாய மற்றும் நாகரிக மாற்றங்களை கண்டு கொள்ளவும் சமூக ஊடகங்கள் வழி சமைக்கின்றன.

ஊடகங்கள் மூலமாக பாடசாலை மாணவர்கள் புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் உதவி புரிகின்றது. குறிப்பாக புதிய தொடர்புகள் மூலம் ஏனைய மொழிகள் மீதான பரீச்சயமும், அவர்களுடைய கலாச்சார விழுமியங்களையும் அவர்களின் எண்ணங்களையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

சமூக ஊடகங்கள் பாடசாலை மாணவர்களுக்கு நன்மையான புதிய விடயங்களை பரிமாற்றினாலும் அவை சில பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன.

அந்த வகையில் சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துவதன் மூலம் கல்வி கற்பதற்கான நேரம் வீணடிக்கப்படுகின்றது. நகைச் சுவை வீடியோக்கள் மற்றும் புகைப்படம் எடுப்பதற்கு அதிகளவு நேரம் செலவிடுவதால் கற்றலில் ஆர்வமின்மைக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு தொடர்ந்து சமூக ஊடகங்களை பயன்படுத்துவதால் கண் தொடர்பான பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. மடிக்கணினி, கணினி போன்றவற்றை பயன்படுத்தும் போது தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதால் உடல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன.

சமூக ஊடகங்களில் குறிப்பாக facebook,Tik Tok போன்ற செயலிகளில் மாணவர்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை பதிவிடுவதன் மூலம் அவர்களுடைய புகைப்படங்கள் திருடப்பட்டு தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதனால் அவர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்ற சம்பவங்களும் நிகழ்வதை இன்றைய காலகட்டத்தில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

சமூக ஊடகங்களில் மாணவர்கள் தவறான காணொளிகளை பார்த்துவிட்டு அவர்களும் தவறான வழியில் தள்ளப்படுகின்ற சூழலையும் சமூக ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. ஆபாச காணொளிகள் மற்றும் தற்கொலை சார்ந்த காணொளிகளை பார்த்தது தானும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முற்படுகின்ற நிலையையும் சமூக ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக வீடியோ Games இற்கு தற்காலத்தில் மாணவர்கள் அடிமையாகி தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் இலங்கையில் அதிகமாக காணப்படுகின்றன குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.

சமூக ஊடகங்களை சாதகமாக பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியாக தம்மை வலுப்படுத்தி கற்றல் மற்றும் சமூகத் தொடர்புகளை விரிவாக்கிக் கொள்ளலாம். ஆனால் அவற்றின் பாதகமான பக்க விளைவுகளை குறைப்பதற்கு மாணவர்களுக்கு பொறுப்பான முறையில் சமூக ஊடக பாதுகாப்பு சார்ந்த (Cyber Crime) விடயங்களையும் மாணவர்களுக்கு தெரியப்படுத்தி இவற்றை பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற பக்க விளைவுகளையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு செய்து அவர்களை முறையான விதத்தில் ஊக்குவிப்பது தற்காலத்தில் அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. ஆகவே மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# 'மிரட்டலுக்கு அஞ்சுபவர் இல்லை கமல்ஹாசன்' தமிழிசையின் விமர்சனத்துக்கு ம.நீ.ம. பதிலடி



"கமல்ஹாசன் மிரட்டலுக்கு பணிபவரும் அல்ல, முதல்வர் ஸ்டாலினின் தலைமையிலான தி.மு.க. அரசு மிரட்டும் போக்குள்ள அரசுமல்ல என்பதை தமிழிசை சவுந்தரராஜன் புரிந்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு ம.நீ.ம. அறிக்கை வெளியிட்டுள்ளது.

'உலக நாயகன்' உள்ளிட்ட அடைமொழிகளைத் துறப்பதாக நடிகரும், மக்கள் நீதி மய்யத் தலைவருமான கமல்ஹாசன் அண்மையில் அறிவித்திருந்தார். இதனை பா.ஜ.க. முக்கியத் தலைவர்களுள் ஒருவரான தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்திருந்தார். "ஆளும் தி.மு.கவின் மிரட்டலால்தான் கமல்ஹாசன் தன் பட்டத்தை துறந்துள்ளார்" என தமிழிசை கூறியிருந்தார்.

இந்நிலையில், "கமல்ஹாசன் மிரட்டலுக்கு பணிபவரும் அல்ல, முதல்வர் ஸ்டாலினின் தலைமையிலான தி.மு.க. அரசு மிரட்டும் போக்குள்ள அரசுமல்ல என்பதை தமிழிசை சவுந்தரராஜன் புரிந்து கொள்ள வேண்டும்." என ம.நீ.ம. அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் ம.நீ.ம. மாநிலச் செயலாளர் முரளி அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பாரதிய ஜனதாவில் கேட்பாரற்று இருக்கும் தமிழிசை சவுந்தரராஜன், இன்று கமல்ஹாசன் தனக்களிக்கப்பட்ட 'உலகநாயகன்' என்ற பட்டத்தை தவிர்க்கும்படி வெளியிட்ட அறிக்கையை, அரைவேக்காட்டுத்தனமாக விமர்சித்துள்ளார். ஆளும் தி.மு.கவின் மிரட்டலால் தான் தன் பட்டத்தை துறந்துள்ளதாக கணிப்பு வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் நின்று எம்.பி. ஆகி மத்திய அமைச்சராகிவிடலாம் என்ற கனவில், இருந்த ஆளுநர் பதவியையும் பறிகொடுத்து நிற்பவர் தமிழிசை சவுந்தராஜன். இவர் தன் வாழ்க்கையையே சரியாக கணிக்க முடியாதவர். நம் தலைவரின் செயல்பாட்டை கணிக்க முயன்றுள்ளார்.

நம் தலைவர் மிரட்டலுக்கு பணிபவரும் அல்ல, முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு மிரட்டும் போக்குள்ள அரசுமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

'உலகநாயகன்' பட்டத்தை துறந்தது தன்னை ஈடுபடுத்திக்கொண்ட கலைத்துறையில் முழுமை பெற்ற ஞானத்தின் வெளிப்பாடு. அது சாதித்த மனிதனின் பக்குவத்தின் வெளிப்பாடு. இதை புரிந்து கொள்ளும் பக்குவம் தங்களுக்கில்லை என்பது வருத்தத்திற்குரியது." எனத் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் நாமக்கல்லில் செய்தியாளர்களை சந்தித்த தமிழிசை சவுந்தரராஜன்,

"இதுவரை மத்திய அரசின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி தி.மு.க. பெயர் மாற்றி வந்தது. இப்போது கமல்ஹாசனை மிரட்டி உலகநாயகன் பட்டத்தையும் மாற்றச் செய்துவிட்டது. உதயநிதிக்கு போட்டியாகிவிடக்கூடாது என உலக நாயகன் பட்டத்தை மாற்றவைத்துவிட்டனர். கமல் இப்போது தி.மு.க.காரராகவே மாறிவிட்டார்" என்று விமர்சித்திருந்தார். இதற்கு பதிலடி கொடுத்தே மநீம பொதுச் செயலாளர் தற்போது அறிக்கை வெளியிட்டுள்ளார்.



# ஜார்க்கண்ட் முதல்கட்ட தேர்தலில் 64.86 சதவீத வாக்குகள் பதிவு

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கான முதல் கட்ட தேர்தலில் 64.86 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நவம்பர் 13, 20 ஆம் திகதிகளில் 2 கட்டமாக தேர்தலை நடத்த தலைமைத் தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. அதன்படி முதல்கட்டமாக 43 தொகுதிகளுக்கு நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. 43 தொகுதிகளில் மொத்தம் 683 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் முதல்வர் சம்பாய் சோரன் மற்றும் முன்னாள் எம்.பி. கீதா கோரா உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர்.

இந்நிலையில், நேற்று காலை 7 மணிக்கு 43 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார், ராஞ்சியில் உள்ள ஏ.டி.ஐ. வாக்கு மையத்தில் வாக்களித்தார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ். தோனி தனது மனைவி சாக்சியுடன் வந்து வாக்களித்தார். மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்தது. இதையடுத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

மாலை 5 மணி நிலவரப்படி முதல் கட்டத் தேர்தலில் மொத்தம் 64.86 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது கடந்த 2019 தேர்தலை விட சற்று அதிகம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். 2019 இல் நடைபெற்ற பேரவைத் தேர்தலின்போது 63.9 சதவீத வாக்குகள் பதிவானது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து 2 ஆவது கட்டமாக மீதமுள்ள 38 பேரவைத் தொகுதிகளுக்கு வரும் 20 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பேரவைத் தேர்தலில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே.எம்.எம்) தலைமையிலான இண்டியா கூட்டணிக்கும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் இடையே இருமுனைப் போட்டி நிலவுகிறது.

ஜார்க்கண்ட் முதல் கட்டத் தேர்தலுடன், கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கும், நாடு முழுவதும் 10 மாநிலங்களில் உள்ள 31 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் நேற்று இடைத்தேர்தல் நடைபெற்றது.




# தெற்கு ஸ்பெயினில் வெள்ளப்பெருக்கு; ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு!

தெற்கு ஸ்பெயினின் கோஸ்டா டெல் சோல் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மலாக்கா மற்றும் வடகிழக்கு கட்டலேனியா ஆகிய பகுதிகளில் இன்றைய தினமும் மழையுடனான வானிலை பதிவாகக் கூடுமென அந்த நாட்டு வானிமை ஆய்வு மையம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் அங்குள்ள முக்கிய சுற்றுலா வலயங்களிலும் வெள்ளப் பெருக்கு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் ஸ்பெயினின் கிழக்கு வலென்சியா பகுதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக 220 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் குறித்த பகுதிக்கு மீண்டும் வெள்ளப் பெருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் வடகிழக்கு ஸ்பெயினில் நேற்றைய தினம் 180 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.











# பைடனை சந்தித்தார் டொனால்ட் டிரம்ப்

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் டிரம்ப் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் ஆகியோர் ட்ரம்பிற்கு வாழ்த்து தெரிவித்தனர்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்பிற்கு வாழ்த்து தெரிவித்ததோடு, வெள்ளை மாளிகையில் வந்து சந்திக்குமாறு ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பும் நேற்று சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் இடம்பெற்றது. 4 ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக வெள்ளை மாளிகைக்கு ட்ரம்ப் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 14/11/2024

## மார்க்கம் பகுதியில் கோர விபத்து

கனடாவின் மார்க்கம் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்துச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து காரண 02



# தமிழ் மக்கள் தமிழ்தேசிய இனத்தின் நலனை முன்னிலைப்படுத்தி வாக்களிக்கவேண்டும்

## கனடிய தமிழர் தேசிய அவை வேண்டுகோள்

இலங்கையில் இன்று இடம்பெறும் பொது தேர்தலில் தமிழ் மக்கள் இம்முறையும் ஒரு தேசமாக திரண்டு தமிழ்தேசிய இனத்தின் நலனை முன்னிலைப்படுத்தி வாக்களிக்கவேண்டும் என கனடிய தமிழர் தேசிய அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கனடிய தமிழர் தேசிய அவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழ் மக்கள் வழக்கமாக காலம்காலமாக இடம்பெற்றுவரும் தேர்தல்களில் தனிமனித நலனை முன்னிலைப்படுத்தாது தமிழ் தேசிய இனத்தின் கூட்டு நலனை முன்னிலைப்படுத்தி தமது வாக்குகளை செலுத்தி தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து வந்திருக்கின்றார்கள். 02

கனடியத் தமிழர் தேசிய அவை

Conseil National de Tamouls Canadien National Council of Canadian Tamils

# வாகனங்கள் மீது கல்வீச்சு

கனடாவில் வாகனங்கள் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஒன்றாறியோ மாகாணம் மார்க்கம் பகுதியில் கற்கள் வீசி எறியப்பட்டதனால் இரண்டு பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் இது வரையில் வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதல்கள் தொடர்பில் சுமார் 11 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

குறிப்பாக அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் வாகனங்கள் மீது இவ்வாறு கற்கள் வீசி எறியப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


இந்த சம்பவம் தொடர்பில் போலீசார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த கல்வீச்சு தாக்குதல் தொடர்பான காணொளிகளும் 02



அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

அப்பாவி மக்கள் வாகனங்களில் பயணம் செய்யும்போது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# கனடாவில் பாரிய துப்பாக்கிச் சூடு; 23 பேர் கைது, 16 துப்பாக்கிகள் மீட்பு

கனடாவில் பாரிய துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது சுமார் நூறு துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள் ளப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத் தின் பேரில் 23 பேரை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்பு பட்ட தாக கூறப்படும் 16 துப்பாக்கிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இசை பதிவு கூடம் ஒன்றிற்கு வெளியே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. திருடப்பட்ட வாகனம் ஒன்றில் அந்த இடத் திற்கு சென்ற சிலர் வெளியே இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.




## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்காவின் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக திரண்டு 75வருடங்களிற்கு மேலாக இடம்பெற்றுவரும் மாபெரும் வீரமும் உயரிய தியாகமும் நிறைந்த விடுதலைப்போராட்டத்திற்கும் மத்தியில் இன்றும் ஓயாது தொடர்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்திற்கு வலுச்சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் வழக்கமாக காலம் காலமாக இடம்பெற்றுவரும் தேர்தல்களில் தனிமனித நலனை முன்னிலைப்படுத்தாது தமிழ் தேசிய இனத்தின் கூட்டு நலனை முன்னிலைப்படுத்தி தமது வாக்குகளை செலுத்தி தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து வந்திருக்கின்றார்கள்.

அதேபோன்று நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக திரண்டு 75வருடங்களிற்கு மேலாக இடம்பெற்றுவரும் மாபெரும் வீரமும் உயரிய தியாகமும் நிறைந்த விடுதலைப்போராட்டத்திற்கும் மத்தியில் இன்றும் ஓயாது தொடர்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்திற்கு வலுச்சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் தொடர்ந்தும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய அடிப்படையில் அமையவேண்டிய தீர்வை தமிழர் தேசத்திற்கான அரசியல்தீர்வை நிராகரித்ததும், இலங்கையின் ஒற்றையாட்சி கட்டமைப்பை தொடர்ந்து திணித்தும் ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையால் உருவாக்கப்பட்ட அனைத்துலக விசாரணை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளை நோக்கிய தீர்மானங்களை நிராகரித்தும்,தமிழின அழிப்பை புரிந்தவர்களிற்கான பொறுப்புகூறலை நிராகரித்தும் வந்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கமும் இவ்வாறான பாதையில் பயணிக்க முயல்வதை அவதானிக்க முடிகின்றது. எனவே தமிழின அழிப்பிற்கான அனைத்து பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை ஏற்றுக் கொண்டு இவற்றை அடைவதற்காக உழைப்பதிலும்,

அத்தோடு தமிழ் மக்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற சமூக பொருளாதார கலாச்சார அனைத்து கூறுகளின் சிதைவுகளை தடுத்து நிறுத்துவதிலும்,

அவற்றை மீள்கட்டுமானம் செய்வதிலும் அர்ப்பணிப்போடும் உண்மையாகவும் மற்றும் செயலிலும் கடைப்பிடிக்க கூடிய ஆளுமை மிக்க வேட்பாளர்களை கண்டறிந்து அவர்களை தெரிவு செய்து தமிழ் மக்களின் தெரிவாக நாடாளுமன்றம் அனுப்புவதே காலத்தின் தேவையாகும்." என்றும் கனடிய தமிழர் தேசிய அவை சுட்டிக்காட்டியுள்ளது.

## மார்க்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக 7 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலை மூடப்பட்டது.

இரண்டு வாகனங்கள் மோதி விபத்து இடம்பெற்றதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். இந்த சம்பவத்தில் ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் இரண்டு பெண்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



### கார் விபத்தில் நால்வர் உயிரிழந்த விவகாரம்:

# பற்றி எரிந்த காரிலிருந்து வெளியில் வருவதற்கு போராடிய இந்தியர்கள்

கனடாவில் டெஸ்லா கார் விபத்தில் இந்தியர்கள் நான்குபேர் உயிரிழந்த விவகாரத்தில் சில புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம், அதாவது, அக்டோபர் மாதம் 24ஆம் கனடாவின் ரொரன்றோவில் வேகமாக சென்றுகொண்டிருந்த டெஸ்லா கார் ஒன்று, சாலையின் நடுவிலிருந்த தடுப்புச்சுவரில் மோதியுள்ளது.

மோதிய வேகத்தில் கார் தீப்பிடிக்க, அந்த வழியாக சென்றுகொண்டிருந்த Rick Harper என்பவர், இரும்புக் கம்பி ஒன்றின் உதவியால், கார் ஜன்னல் கண்ணாடி ஒன்றை உடைத்து, காரிலிருந்த 20 வயதான ஒரு இளம் பெண்ணைக் காப்பாற்றியுள்ளார்.

ஆனால், காருக்குள் கரும்புகை சூழ்ந்திருந்ததால், மேலும் நான்கு பேர் காருக்குள் சிக்கி, தப்பிக்க போராடிக்கொண்டிருந்ததை தான் உணரவில்லை என்று கூறியுள்ளார் ரிக்.

உயிர் தப்பிய அந்த இளம்பெண்ணின் நண்பர்களான Neelraj Gohil (வயது 25), அவரது சகோதரியான Ketaba Gohil (வயது 29), Jay Sisodiya என்பவர், மற்றும் Digvijay Patel ஆகிய நான்கு பேரும் இந்த கோர விபத்தில் உடல் கருகி பலியாகிவிட்டார்கள்.

இந்நிலையில், கார் விபத்தில் உயிர் தப்பிய ஒரே இளம்பெண்ணைக் காப்பாற்றியவரான நிக், விபத்து குறித்து சில விடயங்களை பகிர்ந்து கொண்டுள்ளார்.

காருக்குள் இருந்த அந்த இளம் பெண், கார் கதவைத் திறக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்ததை தான் கண்டதாக தெரிவிக்கும் ரிக், ஆகவே, தான் இரும்புக் கம்பி ஒன்றில் உதவியால் ஜன்னல் கண்ணாடி ஒன்றை உடைத்து அந்தப் பெண்ணை மீட்டதாக தெரிவிக்கிறார்.

ஒருவேளை, கார் மோதிய வேகத்தில் காரின் பேட்டரி செயலிழந்திருக்கக்கூடும். அதனால், கதவைத் திறக் முடியாமல் என தான் சந்தேகிப்பதாக தெரிவிக்கிறார் ரிக்.

விடயம் என்னவென்றால், வழக்கமான பல கார்களைப் போல் இல்லாமல், டெஸ்லா காரின் கதவுகள் எலக்ட்ரானிக் முறையில் செயல்படக் கூடியவையாகும்.

ஆனாலும், டெஸ்லா கார்கள் விபத்துக்குள்ளாகி, அதன் கதவுகள் செயல்படாமல் போகும் நிலையில், கதவைத் திறக்க ஒரு வழி உள்ளதாம்.

அதாவது, கார் கதவில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சிறிய பேனலைத் திறந்தால், அதில் ஒரு கேபிள் இருக்குமாம். அதைப் பிடித்து இழுத்தால், கார் கதவு திறந்துவிடும்.

ஆனால், இந்த பேனல் குறித்த விவரம் குறித்து அதிகம் விளம்பரம் செய்யப்படுவதில்லை.

இன்னொரு விடயம் என்னவென்றால், கார் விபத்துக்குள்ளாகும் நிலையில், இப்படி ஒரு பேனலை திறக்க வேண்டும், அதற்குள் இருக்கும் கேபிளைப் பிடித்து இழுக்கவேண்டும் என்று யோசிக்கும் நிலையில் யாரும் இருப்பதில்லை.

விபத்தில் சிக்கிய பதற்றத்தில் இருக்கும் யாரும், இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டிருக்கமுடியாது என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள்.

